கயிலைப் புனிதர்
**மருதாசல அடிகள்**
இளைய பட்டம், பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010, தமிழ்நாடு

☎ : +91-422 - 2607995, Fax : 2607994
Mobile : +91-98947 61125
website : www.sivasiva.in,
www.peruratheenam.blogsopt.com

உ
சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

Kailai - Punithar
**Dr. Marudhasala Adihal**
M.A., M.A., M.Com., B.G.L., M.Phil, Ph.D., D.Lit.,
Junior Pontiff, Peruraatheenam,
Perur, Coimbatore -641 010, India
☎ : +91-422 - 2607995, Fax : 2607994
Mobile : +91-98947 61125
Email : perurmutt@yahoo.com
perurmadam@gmail.com

**குருமுதல்வர்**
அருள்மிகு தட்சிணாமூர்த்தி திருமடம்,
காந்தள், உதகை

**இளையபட்டம்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

**செயலர்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
நினைவு அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
கல்விக்குழு

சத்வித்ய சன்மார்க்க சங்கம்

**இயக்குநர்**
சாந்தலிங்க அடிகளார் சமுதாயக் கல்லூரி
சீர்வளர்சீர் கயிலைக்குருமணி
சமுதாயக் கல்லூரி
தவத்திரு ஏகாம்பர தேசிகர் சமுதாயக் கல்லூரி

**இணைச் செயலர்**
தமிழகத் துறவியர் பேரவை

**மாவட்டத் தலைவர்**
உலகத் திருக்குறள் பேரவை

**தாளாளர்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
மேல்நிலைப்பள்ளி

தவத்திரு ஆறுமுக அடிகள்
தாய்த்தமிழ் பள்ளி

**முதல்வர்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை,
அறிவியல், தமிழ்க்கல்லூரி

**ஒருங்கிணைப்பாளர்**
தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக
தொலைநிலைக்கல்வி இயக்கக மையம்

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக
சேர்க்கை மையம்

பாரதியார் பல்கலைக்கழக தொலை நிலைக்
கல்வி இயக்கக மையம்

**உறுப்பினர்**
தமிழகப் புலவர் குழு

**மேனாள் உறுப்பினர்**
ஆட்சிப் பேரவை,
பாரதியார் பல்கலைக்கழகம்

## வாழ்த்துரை

மொழி என்பது கருத்தைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படும் ஒரு கருவியாகும். மொழி வளரும்போது அம்மொழியில் இலக்கியங்களும் இலக்கணங்களும் தோன்றி வளர்ச்சியடையச் செய்கின்றன. இலக்கணங்கள் இலக்கியங்களைச் செம்மையுறச் செய்வதற்காக எழுந்தவையாகும். அவ்வகையில் நம் தமிழ் மொழியில் கிடைக்கும் முதல் இலக்கண நூலாகத் திகழ்வது தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் இலக்கண நூலாக மட்டுமல்லாமல் மனித வாழ்வியலை விளக்கும் இலக்கியமாகவும் விளங்குகிறது. தமிழின் தன்னிகரில்லா நூலாகத் திகழும் தொல்காப்பியம் உலக மொழிகள் தோன்றிய காலத்திலேயே மனித வாழ்விற்கான இலக்கணம் கூறிய பெருமையுடையது.

கால மாற்றம், நவீனமாயமாதல் எனப் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வந்தாலும் எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற கருத்துக்களை உள்ளடக்கிய நூலாகத் தொல்காப்பியம் விளங்குவதைக் காண முடிகிறது. தொல்காப்பியத்தைத் தொடாமல் எந்த நூலிற்குள்ளும் நுழைய முடியாது எனுமளவிற்குப் பழைமைக்கும் பழைமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்த் திகழும் நூல் தொல்காப்பியம் ஆகும்.

இத்தகைய தொல்காப்பியத்தை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் நோக்கில் பல்வேறு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. நமது ஆதீனத்தில் தொல்காப்பியர் பேரவை என்ற அமைப்பின் வாயிலாக ஆங்கிலத்திங்களின் முதல் ஞாயிறுதோறும் வகுப்புகள் சிறப்பாக நிகழ்ந்து வருகின்றன. அவ்வகையில் அமெரிகாவின் நியூசெர்சியில் உலகத் தொல்காப்பிய மன்றம் என்ற ஒரு அமைப்பைத் தொடங்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவினை முன்னின்று நடத்தும் முனைவர் நா.க.நிதி அவர்கள் திரைகடலோடியும் திரவியம் தேடு என்பதற்கேற்ப திரைகடலோடியும் தொல்காப்பியத்தை உலகறியச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவுவத்ற்குத் தொல்காப்பியத்தைக் கையிலெடுத்துள்ள இவர்தம் பணி பாராட்டுதற்குரியது. முன்னிலை வகிக்கும் சிவமிகு சிவக்குமார் அவர்கள் நமது ஆதீனத்தொண்டர். நம் ஆதீனத்தமிழ்க்கல்லூரியின் மணிவிழாவினையொட்டி நிகழ்ந்த பயிற்றுமொழி வழிபாட்டு மொழி மாநில மாநாட்டில் மேனாள் குடியரசுத் தலைவர் தெய்வத்திரு ஆ.பா.செ.அப்துல்கலாம் அவர்களால் தொடங்கப்பட்ட வளர்தமிழ் இயகத்தின் பணிகளை அமெரிக்காக்காவில் சிறப்பாக நிகழ்த்தி வருபவர்.

அவ்வகையில் தொல்காப்பியத்தின் பெருமையை உலகறியச் செய்யும் இம்மன்றம் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படவும் இம்மன்றம் உருவாக உழைத்த முனைவர் நா.க.நிதி உள்ளிட்ட அனைவரும் வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ அருள்மிகு அம்பலவாணப் பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீனம் கயிலைக்குருமணி முதுமுனைவர் சீர்வளர்சீர் பேரூரடிகளார் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

மருதாசலம்